# முயல்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.WorldTamilAcademy.com
அறிவே வளம்

# முயல்

துள்ளிக்குதித்து ஓடும் மானும் அல்ல, இலை தழை விரும்பி உண்ணும் மாடும் அல்ல, பெரிய காதை அசைக்கும் யானையும் அல்ல. இத்தகைய சிறப்புக்குரிய விலங்கு முயல். இப்போது இம்முயல்களைப் பற்றி பல வியப்பளிக்கும் விடயங்களை இக்கட்டுரையில் காண்போம்.




முயல் பாலூட்டி வகையைச் சார்ந்த தாவர உண்ணியாகும். இதன் அறிவியல் பெயர் ஒரிக்டோலாக்ஸ் க்யூனிகுலஸ் (Oryctolagus Cuniculus) என்பதாகும். ஆண் முயலினை "பக்"(BUCK) என்றும், பெண் முயலினை " டோ"( D O E ) என்றும் ஆங்கிலத்தில் அழைப்பர். குட்டியினை "குருளை" என்றும் அழைப்பர். முயல் கூட்டமாகவும், குடும்பமாகவும் வாழும் இயல்புடையது. முயலின் வாழ்விடத்தை வாரன் (warren) என்று ஆங்கிலத்தில் கூறுவர். முயல் குளிர், வெயில் என இரண்டு விதமான சூழ்நிலைகளில் வாழும் உடலமைப்பினைக் கொண்டது. சமவெளி, புல்வெளி, சதுப்புநிலக்காடு மற்றும் பாலைவனப்பகுதிகளிலும் முயல்கள் வாழும். ஐரோப்பா, ஆசியா, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா, சுமத்ரா மற்றும் ஜப்பானின் சில தீவுகளிலும் முயல்கள் வாழ்கின்றன. உலகிலுள்ள முயல்களில் பாதியளவு வடஅமெரிக்காவில் உள்ளன. முயல் ஒரு நாளைக்கு 8.5 மணி நேரம் தூங்கும்.

## முயலின் உடலமைப்பு:

முயலினை அதன் கழுத்திலிருந்து வால் வரையுள்ள உடலமைப்பினைக் கொண்டு ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

வளைந்த உடலமைப்பைக் கொண்ட முயலினை புல் ஆர்க்(Full Arch) என்பர். இம்முயல் எப்போதும் விழிப்புடனும் ஆற்றலுடனும் இருக்கும். பாதிவளைந்த உடலமைப்பினைக் கொண்ட முயலினை செமி ஆர்க் (Semi Arch) என்பர். மேற்கூறிய இரு வகைக்கும் இடைப்பட்ட முயலினை கமர்ஷியல் (Commercial) என்று அழைப்பர். இம்முயல் உடல் முழுவதும் சம அளவு நீளமும், அகலமும் கொண்டது.




மற்ற உடலமைப்பை விட சற்று சிறிய உடலமைப்பைக் கொண்ட முயலை காம்பேக்ட் (Compact) என்று அழைப்பர். உருளை முயல் (Cylindrical) தற்போது கலிஃபோர்னியாவில் குறைந்த எண்ணிக்கையில் உள்ளது.

முயலின் உடல் முழுவதும் அடர்த்தியான ரோமங்கள் காணப்படும். இதனால் கடும் குளிரையும், வெப்பத்தையும் தாங்கும். சராசரியாக ஐந்து டிகிரி முதல் முப்பத்திமூன்று டிகிரி வரை தாங்கும். இதன் உடலுக்கு உகந்த வெப்பநிலை பத்து டிகிரியாகும். ரோமத்தினை கோட், கோனே, சீப்பு, ஃபர் என்று அழைப்பர். இதன் உடலின் வெப்பநிலை ஒரு நாள் பகலிரவில் மாறுபடும். தரையில் உண்டாகும் அதிர்வினை உணர்ந்து ஏதேனும் அபாயம் ஏற்படுமெனில் அதனை வாலின் மூலம் தன் இனத்திற்குத் தெரிவிக்கும்.

## முயலின் உணவுகள்:

இலை, தழை, புல், மலரின் மொட்டுக்கள், மரப்பட்டை மற்றும் கிழங்குகள் (கேரட், முள்ளங்கி) ஆகியவற்றை உண்ணும். இளம் முயல்கள் உணவினை கொறித்து உண்ணுகின்றன. வளர்ந்த முயல்கள் கடித்து உண்ணும். உணவில் உள்ள சத்துப் பொருட்களை செரிக்க சிறப்பான செரிமான உறுப்பு உள்ளது. மேலும் மாடுகளைப் போல அசைபோடும் தன்மையுடையது.



முயல்கள் என்றாலே அதன் பெரிய காது தான் நம் கண் முன் தோன்றும். உண்மையில் அது காதுகள் இல்லை காது மடல்களே. காதுகள் தலைக்குள் உள்ளன. முயலின் காதுகள் எந்நேரமும் விழிப்போடு இருக்கும். இரண்டு விதமான தோற்றத்தில் முயலின் காதுகள் காணப்படும். ஒரு வகை வானைப் பார்த்து நின்றவாறும் மற்றொன்று தரையைப் பார்த்து தொங்கியவாறும் இருக்கும்.

முயலுக்குக் கேட்கும் திறன் அதிகம். தரையில் குனிந்து இரை உண்ணும் போது காதுகள் "ரேடார்" போல எப்போதும் உயர்ந்த வண்ணமே இருக்கும். ஏதேனும் சிறு சத்தம் கேட்டாலும் உடனே நிமிர்ந்து பார்க்கும். முயலினை காதைப் பிடித்தே தூக்க வேண்டும். முயலின் காதுகள் அவற்றைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றன. அதிக பட்சமாக 31.12 அங்குலம் வரை முயலின் காது வளரும்.



முயல்களுக்கு இரவில் கண் பார்வை நன்றாகத் தெரியும். முயல்கள் கிட்டப் பார்வை உடையவை. குதிரையைப் போல எல்லா பக்கங்களையும் பார்க்கும் திறன் கொண்டவை. மோப்ப சக்தி அதிகம் உடையது. தன்னை நெருங்குவது நண்பனா? எதிரியா? என்பதை தன் மோப்ப சக்தி மூலம் அறிந்து கொள்ளும். முயல்களுக்குக் கூர்மையான பற்கள் உள்ளன. முயலின் பற்கள் வளர்ந்து கொண்டே இருக்கும். முயல் தாவி ஓடுவதற்கு ஏதுவாக முன்னங்கால்கள் குட்டையாகவும், பின்னங்கால்கள் நீண்டதாகவும் இருக்கும்.



முயல்களுக்கு மட்டுமே கால்களின் பட்டைகளில் வியர்வை உண்டாகும். முயல் அதிகபட்சமாக மூன்று மீட்டர் தாண்டும். முயல் வேகமாக இனப்பெருக்கம் செய்யும் விலங்கு. பொதுவாக முயலின் சூல்காலம் முப்பத்தைந்திலிருந்து நாற்பது (35 - 40) நாட்களாகும். மூன்று முதல் ஒன்பது (3-9) குட்டிகள் வரை ஈனும். முயல் குட்டிகள் (காட்டு முயல்) ரோமத்துடனும், கண்களைத் திறந்து கொண்டே பிறக்கும். வளர்ப்பு முயல்கள் கண்களை மூடிய வண்ணம் உடலில் உரோமம் இன்றி பிறக்கும். இரண்டு வாரங்களுக்குப் பின் திட உணவினை உண்ணும். பதினாறு வாரங்களுக்குப் பிறகு பருவ முதிர்ச்சி அடைகின்றன. முயல் பதினெட்டு ஆண்டுகள் வாழும். முயலின் கொன்றுண்ணிகள் சிங்கம், புலி, செந்நாய் இறைவாரிப் பறவைகள் மற்றும் பல உள்ளன.

முயலை அதன் வாழ்விடத்தை அடிப்படையாகக் கொண்டு குழி முயல், பாறை முயல் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

தரையில் குழி தோண்டி வளை அமைத்து வாழ்பவை குழி முயல். இதில் இந்தியக்குழி முயல், கம்பளிக் குழி முயல், ஹிஸ்பிட்டு காட்டு முயல், என பகுத்துப் பார்க்கலாம். பாறை இடுக்குகளில் வாழ்பவை பாறை முயல் என்று அழைப்பர். இமயப் பாறைமுயல், லடாக் பாறை முயல், நுப்ரா, பனிச் செருப்பு முயல், கருவிதழ் பாறைமுயல், பெருஞ்செவிப் பாறை முயல், மலைப் பாறை முயல் என வகைப்படுத்துவர். இந்தியக் குழி முயலினை கேப் முயல் அல்லது கறுப்பு முயல் என்று அழைப்பர். இவ்வகையான முயல்கள் அரேபிய தீபகற்பம், மத்திய ஆசியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் காணப்படுகின்றன.



மேலும் ஆப்பிரிக்காவில் அதிகமாக உள்ளன. இது நீண்ட மெல்லிய கால்களையும், பெரிய பின்னங் கால்களையும் கொண்டது. சிவப்பு கலந்த பழுப்பு அல்லது கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் இருக்கும். முயல் க.ரு டு கிலோ எடையும், 4 0 - 6 8 செ.மீ, நீளமும் கொண்டது. இதன் வாலின் நீளம் 7.15 செ.மீட்டராகும். வழக்கமாக தனித்தும் இனப்பெருக்க காலத்தில் சிறு சிறு குழுக்களாகவும் வாழும். இதன் சூல்காலம் நாற்பத்தியிரண்டு நாட்கள். நான்கு குட்டிகளை ஈனும். எட்டு மாதத்திற்குப் பிறகு பருவ முதிர்ச்சி அடையும். இதன் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுளாகும்.

## ஹிஸ்பிட் முயல்



ஹிஸ்பிட் (Hispid) காட்டு முயல் அசாம், மேற்கு வங்காளம் மற்றும் உத்திரப் பிரதேசத்தில் உள்ள டேராய் பகுதியில் வாழ்கிறது. இம்முயல் தடித்த குட்டையான முள் மயிர் கொண்டது. பழுப்பு நிறமாகவும், அடிப்பகுதி வெண்மையாகவும், காது சிறியதாகவும் இருக்கும். மெதுவாக ஓடும். வேர், மரப்பட்டை, இலை, தழை போன்றவற்றை உணவாக உண்ணும். தனது இரவு கழிவுகளைத் தானே உண்ணும். ஏனென்றால் அதில் அதிக அளவில் புரதங்கள் உள்ளன. ஓராண்டில் இரண்டு அல்லது மூன்று முறை குட்டி ஈனும். இனப்பெருக்கத்திற்குக் குட்டி ஈன்றவுடனே தயாராகி விடும்.

## இமயப் பாறை முயல்:

இமயப்பாறை முயல் ஒரு குழுவாக வாழும். ஒவ்வொரு குழுவிலும் பத்து முதல் எண்பது முயல்கள் இருக்கும். இதன் கழுத்து குள்ளமாகவும், மேல் வெட்டுப் பற்கள் தந்தம் போன்றும் இருக்கும். இமயப்பாறை முயல் நடக்கும் போது குதிங்கால் நிலத்தில் படாமல் கால் விரல்களால் நடக்கும். முதுகுப்புறப்பகுதியிலிருந்து ஒரு வாசனை சுரப்பியை வெளியிடுகிறது. இச்சுரப்பியின் மூலம் தனது எல்லையையும், ஆளுமையையும் காத்துக் கொள்கிறது. ஆண் முயலை விட பெண் முயல் சுமார் பத்து சதவிகிதம் குறைவாக இருக்கும். இதன் நீளம் ஐம்பது செ.மீ. மூன்று முதல் நான்கு கிலோ



எடை கொண்டதாக இருக்கும். வெவ்வேறு சூழல்களில் உருவ அமைப்பு வேறுபடுகின்றன. இம்முயலின் உணவு தோட்ட செடிகள் மற்றும் இலை தழைகள் போன்றவை ஆகும். தண்ணீர் இல்லாமல் நெடுந்தூரம் செல்ல முடியும். ஏனென்றால் இலை, தழையில் உள்ள நீர்ச்சத்தே போதுமானது. இலைகளை உண்ணும் போது, தாடைகள் நகர்ந்து கர்ஜனை போன்ற ஒலியை எழுப்புகிறது. காலை மற்றும் மாலையில் மிகவும் தீவிரமாக உணவினைத் தேடும். பிப்ரவரி மாதத்தில் இனப்பெருக்கத்தில் ஈடுபடும். ஆண் முயல் மே முதல் ஜனவரி வரை இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதில்லை. இதன் சூல்காலம் முப்பத்தொன்று நாட்கள். நான்கு குட்டிகளை ஈனும். இரண்டு முதல் மூன்று வாரம் பாலைக் குடிக்கும். இவ்வகையில் வளை அமைப்பதில் பெண் முயல்களே பெரிதும் ஈடுபடுகின்றன. இவை பத்து ஆண்டுகள் உயிர் வாழும்.

## நுப்ரா பாறைமுயல்:

நுப்ரா பாறை முயல்களுக்கு சிறிய கால்களும், உடலும், வட்டமான காதும் இருக்கும். இதில் முப்பது இனங்கள் உள்ளன. இதனை ‘விசில்’ முயல் என்றும் அழைப்பர். ஆசியா, வடஅமெரிக்கா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் சில பகுதியில் காணப்படும். இதன் நீளம் பதினைந்து முதல் இருபத்திமூன்று செ.மீ. இவ்வினங்களின் உடல் எடையில் 120 முதல் 350 கிராம் இடையிலான எடை வேறுபாடு காணப்படுகிறது. மற்ற முயலினைப் போல இல்லாமல் சேமித்து உண்ணும் பழக்கத்தை மேற்கொள்கிறது. அதாவது கோடை

காலத்தில் இரையை சேமித்து குளிர் காலத்தில் உண்ணுகின்றன. இவ்வகையான முயல்கள் இணை சேரவும், ஆபத்துக்கும், இரைக்காகவும், வெவ்வேறு விதமான ஒலிப்பு முறையினை பயன்படுத்தும். இதன் சூல்காலம் இருபத்தைந்து முதல் முப்பது நாட்கள். ஐந்து குட்டிகளை ஈனும். ஆயுட்காலம் தோராயமாக ஏழு ஆண்டுகளாகும். ஆயுட்காலம் பாலினங்களுக்கிடையே வேறுபடுகின்றன.

## லடாக் பாறைமுயல்:



லடாக் (Ladak pika) என்னும் பாறை முயல் இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய பகுதியில் வாழ்கிறது. பலவகையான மலைத் தொடரிலும், பள்ளத்தாக்கிலும் காணப்படும். இதன் பொந்தின் நீளம் 4,300 முதல் 5,450 மீ வரை இருக்கும். பழுப்பு சாம்பல் நிறத்திலும், அடிப்பக்கம் மஞ்சள், அல்லது வெள்ளை நிறத்திலும் இருக்கும். உடலின் நீளம் ஏழு முதல் ஒன்பது அங்குலம். ஜூன் மற்றும் ஜூலையின் ஆரம்பத்தில் இனப்பெருக்கம் செய்யும். வடஅமெரிக்காவில் அதிகம் உள்ளது.

## பனிச்செருப்பு முயல்:



பனிச்செருப்பு முயல் (Snowshoe hare) பனியிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள பின்னங்காலின் அடி பெரிதாகவும், உள்ளங்காலில் ரோமமும் இருக்கும். நீண்ட காது, குறுகிய வால் ஆணை விடப் பெண் பெரியது. உடல் நீளம் 36-52 செ.மீ. எடை 1.3 கிலோ கொண்டது. பனிச்செருப்பு முயலின் சிறப்பு அம்சமே உருமறைப்பு தான். உருமறைப்பு என்பது காலநிலைக்கு ஏற்பவும் உடலில் ஏற்படும் வேதியியல் மாற்றத்தாலும் நடைபெறும். இந்த நிறமாற்றம் மெலடோனின் என்ற இரசாயன மாற்றத்தாலும் தொடர்ச்சியாக எழுபது நாட்கள் சூரிய ஒளி இல்லை என்றாலும் நடைபெறும். இது ஒரு வகையான உயிர் காக்கும் உத்தியே.

கண்ணுக்குத் தெரியாத வகையில் தன்னை மறைத்துக் கொள்ளும். சூழலிருந்து பிரித்துக் காண முடியாத வகையில் உருவத்தை மாற்றிக் கொள்ளும். இவ்வாறாக கொன்றுண்ணிகளிடம் இருந்து தன்னை காத்துக் கொள்கிறது. கோடையில் பழுப்பு நிறமாகவும், குளிர் காலத்தில் வெள்ளை நிறமாகவும் இருக்கும். இதன் பக்கவாட்டுப்பகுதி ஆண்டு முழுவதும் வெள்ளை நிறமாக இருக்கும். கோடையில் புல், இலை, தழைகளை உண்ணும். குளிர் காலத்தில் கிளைகள், மரப்பட்டை, மலரின் மொட்டுக்களை உண்ணும். இரவில் உணவைத் தேடும். அதிகாலையில் தீவிரமாகத் தேடும். சிறு சிறு குழுக்களாக இருக்கும். இவை 1.16 ஹெக்டர் பரப்பளவில் வாழும். சில சமயம் உணவு, நீர் இவைகளுக்காக அதிக தூரம் பயணிக்கும். பல ஆண் முயலுடன் இனப்பெருக்கத்தில் ஈடுபடும். இனப்பெருக்கக் காலம் மார்ச் முதல் ஆகஸ்ட். மூன்று முதல் ஐந்து குட்டிகளை ஈனும். இதன் ஆயுட்காலம் பத்து ஆண்டுகள் ஆகும்.



முயல் என்றவுடன் அதன் காதும், வேகமாக ஓடும் பண்பு தானே சட்டென்று நம் நினைவில் வரும். ஆனால் முயலின் உயிர் காக்கும் உத்தியில் ஒன்று உருமறைப்பு பண்பாகும். பொதுவாக நூற்றைம்பது வண்ணங்களில் முயல்கள் உள்ளன. முயல்கள் உணவினை கொறித்து உண்ணுவதில்லை. முயல்களில் இனப்பெருக்கம் அதிகமாக நடைபெறுவதால் வேளாண்மைக்கு பெறும் இடையூறாக உள்ளது. முயலின் முக்கியமான பொழுதுபோக்கு குழி தோண்டுதல். முயலின் முதுகெலும்பு பலவீனமாக உள்ளதால் எளிதில் உடைத்து விடலாம். முயலினை காட்டு முயல், வளர்ப்பு முயல் என இரண்டாகப் பிரிக்கலாம்.

இந்தியாவில் காட்டு முயலினை வளர்க்கக் கூடாது என வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் உள்ளது. வளர்ப்பு முயல்கள் இறைச்சி, ரோமம், தோல் இவைகளுக்காக வளர்க்கப்படுவதால். உணவு, பாதுகாப்பு, இனப்பெருக்கம் ஆகிய அனைத்தும் சரியான முறையில் கிடைக்கும். அதனால் இதன் ஆயுட்காலம் அதிகமாக இருக்கும்.

ஆனால் காட்டு முயல் தானே தேடிச் சென்று அனைத்தையும் பெறுவதால் கொன்றுண்ணிகளால் அதிக ஆபத்து ஏற்படும். ஆயுட் காலமும் குறைவு தான். காட்டு முயலுக்கும் வளர்ப்பு முயலுக்கும் மைஸோமடோசிஸ் (myxomatosis) என்ற நோய் தாக்கும்.

இந்நோயினால் முயல் இறந்து விடவும் வாய்ப்பு உள்ளது. இரண்டாம் உலகப் போரின் போது முயலின் இறைச்சி முக்கிய உணவாக படைவீரர்களுக்குக் கொடுக்கப்பட்டது. பொதுவாக மதம், மற்றும் புராணங்களில் முயல் ஒரு அடையாளச் சின்னமாக உள்ளது. பண்டைய எகிப்து முயல்கள் நாய் பந்தயத்தில் பயன்படுத்தப்பட்டன. காட்டு முயல் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்து வந்தாலும், கி.மு. 1500 ஆம் ஆண்டுகளில் தான் முயலினைப் பற்றிய பதிவு உள்ளது. செப்டம்பர் 24 முயல்களின் தினமாகக் கொண்டாடப்படுகின்றன.



காடுகளை அழித்தல்.



முயல் வேட்டையாடுதல்.

வனங்களை அழிப்பதையும், வன விலங்குகளை வேட்டையாடுவதையும் மனிதன் நிறுத்தி விட்டால் வன உயிரினங்களைக் காத்து விடலாம்.

***

உருமறைத்து உயிர் வாழும்
உத்திக் கொண்டது முயல் இனம்.
உலகின் எந்த சூழலையும் தனக்கு
சாதகமாக்கி வாழும் உத்தியினை நமக்கு
எடுத்து இயம்புகின்றது இந்த முயலின் வாழ்வியல்
என்ற நம்பிக்கையின் உந்துதல் என்னை அடுத்த
படைப்புக்கு அழைத்துச் சென்றது.






மு. இராஜா., M.A.,B.Ed.,
[மொழி ஆய்வாளர்]
உடன் உலகத்தமிழ்க் கல்விக்கழக தமிழ் ஆசிரியர்கள்
மற்றும் வரைகலையாளர்கள்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com www.tamilacademy.com